திமுகவின் வெளிச்சத்தில் மார்க்சிஸ்ட் இல்லை !

மாநிலச் செயலர் பெ.சண்முகம்

விழுப்புரம், ஜன. 5: திமுகவின் வெளிச்சத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இருப்பதாக கூறுவது பொருத்தமானதல்ல என்று கட்சியின் புதிய மாநிலச் செயலர் பெ.சண்முகம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

விழுப்புரத்தில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் 24-ஆவது மாநில மாநாட்டின் நிறைவில் மாநிலச் செயலராகத் தேர்வு செய்யப்பட்ட பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 24-ஆவது மாநில மாநாடு தனது நோக்கத்தை நிறைவேற்றியிருக்கிறது. இதன்மூலம் தமிழகத்திலுள்ள அரசியல் சூழ்நிலைகள் சம்பந்தமாகவும், தொழிலாளர்கள், விவசாயிகள், உழைக்கும் மக்களின் பல்வேறு பிரச்னைகள் சம்பந்தமாகவும் மாநிலம் முழுவதுமிருந்து வந்த 600-க்கும் மேற்பட்ட கட்சிப் பிரதிநிதிகள் விவாதித்து பல முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறோம்.

வலிமை மிகுந்த போராட்டம்: இந்தத் தீர்மானங்கள் அனைத்தும் செயல் வடிவம் பெறக்கூடிய வகையில் அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும். குறிப்பாக, மத்திய பாஜக அரசு, மாநில அரசுகளின் அதிகாரங்களைப் பறிப்பது, நிதி ஒதுக்கீடு செய்வதில் பாரபட்சம் காட்டுவது உள்ளிட்ட மக்கள் விரோத நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. இதற்கு எதிராக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வலிமை மிகுந்த போராட்டத்தை தமிழகத்தில் முன்னெடுப்பது என்று தீர்மானித்திருக்கிறோம். உழைக்கும் மக்களுக்கு எதிரான, பொருளாதார கொள்கைகளுக்கு எதிரான எங்கள் போராட்டத்தைத் தொடர்ந்து நாங்கள் மேற்கொள்வோம்.

போராட்டங்களைத் தடுக்க உரிமையில்லை: தமிழகத்தில் மதவெறி சக்திகளை எதிர்ப்பதில் திமுகவுடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து பயணிக்கும். அதே நேரத்தில் தமிழகத்தில் நவீன தாராளமயக் கொள்கையை அமல்படுத்துகிறோம் என்ற பெயரில், மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கக்கூடிய வகையில் மாநில அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எதிராக ஜனநாயகப் பூர்வமான முறையில் எங்கள் போராட்டம் தொடரும்.

ஊர்வலம், ஆர்ப்பாட்டம், போராட்டம் போன்றவை இந்திய அரசமைப்பு மக்களுக்கு வழங்கியிருக்கும் அடிப்படை உரிமை. இந்த உரிமைகளை மறுப்பதற்கு எந்த அரசுக்கும் உரிமை கிடையாது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டு செந்தொண்டர் பேரணிக்கு விழுப்புரம் மாவட்டக் காவல் துறை அனுமதி மறுத்த நிலையில்தான், எங்களது கண்டனத்தை தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதை நிச்சயமாக திமுக தலைமையும் புரிந்து கொள்ளும் என்று நம்புகிறோம்.

திமுகவின் வெளிச்சத்தில் நாங்கள் இல்லை: திமுகவுடன் நாங்கள் பல நேரங்களில் உறவாக இருந்திருக்கிறோம். பல நேரங்களில் எதிர் வரிசையில் இருந்திருக்கிறோம். அவர்களால்தான் (திமுக) எங்களுக்கு வெளிச்சம் கிடைக்கிறது என்பதை ஏற்கமுடியாது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தனது பலத்துக்கு ஏற்ப, மக்கள் நலன் சார்ந்த பிரச்னைகளில் சமரசமற்ற போராட்டங்களை நடத்துவதன் மூலம் தமிழகத்தில் செல்வாக்குமிக்க கட்சியாக இருக்கிறதே தவிர, திமுகவின் வெளிச்சத்தில்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது எனக் கூறுவது பொருத்தமானதல்ல என்றார் பெ.சண்முகம்.

விழுப்புரத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மார்க்சிஸ்ட் மாநாட்டில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலச் செயலர் பெ.சண்முகம், தற்போதைய மாநிலச் செயலர் கே.பாலகிருஷ்ணன் ஆகியோரின் கைகளை உயர்த்திப் பிடித்து வாழ்த்து முழக்கங்களை எழுப்பிய கட்சியின் அரசியல் தலைமைக் குழு ஒருங்கிணைப்பாளர் பிரகாஷ் காரத், உறுப்பினர்கள் பிருந்தா காரத், ஜி.ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர்.

பெண்கள், குழந்தைகள் மீதான வன்முறையைத் தடுத்து நிறுத்த வேண்டும்

மார்க்சிஸ்ட் மாநில மாநாட்டில் தீர்மானம்

விழுப்புரம், ஜன.5: தமிழகத்தில் பெண்கள், குழந்தைகள் மீதான வன்முறைகளைத் தடுத்து நிறுத்த உத்தரவிட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விழுப்புரத்தில் கடந்த 3-ஆம் தேதி தொடங்கிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 24-ஆவது மாநில மாநாடு ஞாயிற்றுக்கிழமை நிறைவு பெற்றது.

தீர்மானங்கள்: கோயில்கள், மடங்கள், அறக்கட்டளை, வக்ஃப் வாரிய இடங்களில் பல தலைமுறைகளாக குடியிருப்பவர்களின் குடியுரிமையை உறுதிப்படுத்த வேண்டும்.

விவசாய நிலங்களில் சாகுபடி செய்துவரும் குத்தகை விவசாயிகள், இனாம் நில விவசாயிகள் நில உரிமையைப் பாதுகாக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக அரசு மின் கட்டண உயர்வையும், நிலைக் கட்டணத்தையும் கைவிட வேண்டும். தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகளை மறுசீரமைப்பு செய்யும் போது அனைத்துக் கட்சிகள் பிரதிநிதிகள் அடங்கிய குழுக்களை அமைத்து பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் பெண்கள், குழந்தைகள் மீதான வன்முறைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும். தமிழகத்தில் பட்டாசு ஆலை விபத்துகளைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசு ஊழியர்கள், சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள், பள்ளி, கல்லூரி ஆசிரியர்களின் கோரிக்கைகள் மீதான தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஜனநாயக முறைப்படி தேர்தலை நடத்த வேண்டும்.

சிறுபான்மைவாழ்வுரிமை, வழிபாட்டு உரிமையைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்வோம். அமைப்புசாராத் தொழிலாளர்களைப் பாதுகாக்க மாநில அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

விவசாயிகளைப் பாதிக்கும் பிரச்னைகளுக்கு மத்திய, மாநில அரசுகள் தீர்வு காண வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மார்க்சிஸ்ட் புதிய மாநிலச் செயலருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, ஜன. 5: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய மாநிலச் செயலர் பெ.சண்முகத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின்: ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் விவசாயத் தோழர்களுக்காகவும் உழைத்த பெ.சண்முகத்துக்கு கடந்த ஆண்டு அண்ணல் அம்பேத்கர் விருதை திமுக அரசு வழங்கியது.

அத்தகைய சிறப்புக்குரிய பெ.சண்முகம், மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலராக தேர்வு செய்யப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது.

கடந்த பல ஆண்டுகளாக தமிழ் நாட்டில் மதச்சார்பற்ற சக்திகளின் ஒருங்கிணைப்புக்கும், திமுக கூட்டணியின் அனைத்து வெற்றிகளுக்கும் எந்தநாளும் உழைத்தவர் கே.பாலகிருஷ்ணன். அவரது பணிகளுக்கு நன்றி. இரண்டு தோழர்களும் தங்களது பணியை தொய்வின்றித் தொடர வாழ்த்துகள்.

இரா.முத்தரசன் (இந்திய கம்யூனிஸ்ட்): மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய மாநிலச் செயலர் பெ.சண்முகம் மாணவப் பருவத்திலிருந்தே இந்த அமைப்பில் இணைந்து செயல்பட்டு வருபவர். அவர் தனது பணியில் வெற்றி பெற வாழ்த்துகள்.

விஜய்: தவெக தலைவர் விஜய் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவு: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய மாநிலச் செயலராக தேர்வு செய்யப்பட்டுள்ள பெ.சண்முகத்துக்கு வாழ்த்துகள்.

பொதுவுடைமைப் பாதையில் ஏழை, எளிய மக்களுக்காகப் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்த போற்றுதலுக்குரிய பணி, வரும் காலங்களிலும் சமரசமின்றித் தொடரட்டும்.

முதல்வரைச் சந்தித்து முறையிடுவோம்: கே.பாலகிருஷ்ணன்

விழுப்புரம், ஜன.5: தமிழகத்தில் அறிவிக்கப்படாத அவசரநிலை போல காவல் துறையினர் நடத்துவதாக முதல்வரைச் சந்தித்து முறையிடுவோம் என்று கே.பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

விழுப்புரத்தில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டின் நிறைவு நாளில் தொகுப்புரை வழங்கிய பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

எங்கள் மாநில மாநாட்டு ஊர்வலத்துக்கு அனுமதியில்லை என காவல் துறை தெரிவித்தனர். ஊர்வலம் சென்றால் போக்குவரத்துப் பாதிக்கப்படும் என்று கருதி, அதை நாங்கள் ஏற்றுக் கொண்டோம். ஆனால், செந்தொண்டர் பேரணிக்கு அனுமதி மறுத்ததால் தான் எங்கள் கண்டனத்தை தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

குறைகளை நிவர்த்தி செய்து, திமுக தனது நற்பெயரைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் இதை கூறினோமே தவிர, திமுக அரசை எதிர்க்க வேண்டும் என்பதற்காக அல்ல.

அறிவிக்கப்படாத அவசரநிலை போல காவல் துறையின் செயல்பாடு உள்ளது. இதனால், அரசுக்கு அவப்பெயர் ஏற்படுகிறது. இதுகுறித்து நாங்கள் முதல்வரை விரைவில் சந்தித்து முறையிடுவோம் என்றார் கே.பாலகிருஷ்ணன்.

மார்க்சிஸ்ட் மாநாட்டில் பங்கேற்ற மதுரை எம்.பி.க்கு உடல்நலக் குறைவு

விழுப்புரம், ஜன. 5: விழுப்புரத்தில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில மாநாட்டில் பங்கேற்ற மதுரை எம்.பி. க.வெங்கடேசனுக்கு ஞாயிற்றுக்கிழமை திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டது.

விழுப்புரத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 24-ஆவது மாநில மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை (ஜன.3) தொடங்கியது. சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பிரதிநிதிகள் மாநாடு நடைபெற்றது.

மாநாட்டில் பங்கேற்ற மதுரை மக்களவை உறுப்பினர் க.வெங்கடேசன் தனியார் விடுதியில் தங்கியிருந்தார். ஞாயிற்றுக்கிழமை காலை நடைபயிற்சிக்காக சென்றபோது, அவரது இடது கையில் கடுமையான வலி ஏற்பட்டது. இதையடுத்து, அவர் திருச்சி-சென்னை நெடுஞ்சாலையிலுள்ள தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டார். அங்கு, பல்வேறு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், பிற்பகல் 2 மணி வரை மருத்துவக் கண்காணிப்பில் க.வெங்கடேசன் இருந்தார். இதையடுத்து, அவர் மாநாட்டு நிகழ்வுகளில் பங்கேற்றார்.

முன்னதாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த வெங்கடேசனை, முதல்வர் மு.க.ஸ்டாலின் கைப்பேசி வாயிலாக தொடர்பு கொண்டு நலம் விசாரித்தார். இதே போல, அமைச்சர்கள் க.பொன்முடி, சி.வெ.கணேசன் உள்ளிட்டோர் நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர்.

குளிர்கால தொற்று பரவும் இடங்களில் மருத்துவ முகாம்கள்

சென்னை, ஜன.5: குளிர் கால நோய்களைத்தடுக்கதேவையான இடங்களில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் மூலம் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படவுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதன்படி, ஒவ்வொரு குழுவிலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு மருத்துவ உதவியாளர் மற்றும் ஆய்வக நுட்பனர் இடம்பெற்றிருப்பர்.

மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் அனைத்தும் வாகனங்களிலேயே கொண்டு சென்று நேரடியாக சிகிச்சையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மக்கள் நல்வாழ்வுத் துறை அதிகாரிகள் கூறியதாவது: பனிப் பொழிவு மற்றும் மழைப் பொழிவுக்குப் பிறகு இன்ஃப்ளூயன்ஸா காய்ச்சல், சுவாச பாதிப்பு, டெங்கு, சிக்குன் குனியா, டைபாய்டு, எலிக் காய்ச்சல், பாக்டீரியா தொற்று, சேற்றுப் புண், வயிற்றுப்போக்கு போன்ற பாதிப்புகள் பரவ அதிக வாய்ப்புள்ளது.

அதைக் கருத்தில் கொண்டு நோய் பரவல் அதிகமாக உள்ள பகுதிகளில் நடமாடும் மருத்துவக் குழுக்களை அனுப்பி மருத்துவ முகாம்களை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நோய்த் தொற்றுக்குள்ளானவர்களுக்கு ரத்தப் பரிசோதனைகளை மேற்கொண்டு நோயின் தன்மையை வகைப்படுத்தவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

உயர் சிகிச்சை தேவைப்படுவோருக்கு அதற்கான வசதிகள் உள்ள அரசு மருத்துவமனைகளில் பரிந்துரைத்து சிகிச்சையளிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மற்றொருபுறம், நோய்களைப் பரப்பும் கொசுக்கள் மற்றும் லார்வா உற்பத்தியை தடுக்க சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதைத் தவிர, குடிநீரில் போதிய அளவு குளோரின் கலந்து விநியோகித்தல், உணவுப் பொருள்கள் தரத்துடன் இருப்பதை உறுதி செய்தல் உள்ளிட்ட பணிகளையும் சுகாதாரத் துறை மேற்கொண்டு வருகிறது என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

பட்டாசு ஆலை வெடிவிபத்து: 3 பேர் கைது

விருதுநகர், ஜன. 5: விருதுநகர் அருகேயுள்ள பொம்மையாபுரம் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்து தொடர்பான வழக்கில் 3 பேரை போலீஸார் ஞாயிற்றுக்கிழமை கைது செய்தனர்.

விருதுநகர் அருகே பொம்மையாபுரத்தில் உள்ள ஒரு பட்டாசு ஆலையில் சனிக்கிழமை வெடி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் சிவக்குமார் (56), வேல்முருகன் (54), காமராஜ் (54), கண்ணன் (54), மீனாட்சிசுந்தரம் (46), நாகராஜ் (37) ஆகிய 6 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். ஒருவர் பலத்த காயமடைந்தார்.

இதுதொடர்பாக அந்த ஆலையின் உரிமையாளர் பாலாஜி, அந்த ஆலையை விலைக்கு வாங்கிய 2-ஆவது உரிமையாளர் சசிபாலன், பங்குதாரர் நிரஞ்சனா தேவி, கண்காணிப்பாளர்கள் கணேசன், பிரகாஷ், பாண்டியராஜ், மேற்பார்வையாளர் சதீஷ்குமார் ஆகிய 7 பேர் மீது வச்சகாரபட்டி போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். இவர்களில் சசிபாலன், கணேசன், சதீஷ்குமார் ஆகிய மூவரை போலீஸார் ஞாயிற்றுக்கிழமை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

ஆற்றில் மூழ்கி இறந்ததாக கருதப்பட்டவர் உயிருடன் வந்ததால் பரபரப்பு

தரங்கம்பாடி, ஜன. 5: செம்பனார்கோவில் அருகே ஆற்றில் மூழ்கி இறந்ததாக கருதப்பட்டவர் உயிருடன் வந்ததால் கிராமத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

செம்பனார்கோவில் அருகே மேலப்பாதி கிராமத்தில் கடந்த 22-ஆம் தேதி அழுகிய நிலையில் அடையாளம் தெரியாத ஆண் சடலம் காவிரி ஆற்றில் மிதந்தது. செம்பனார்கோவில் போலீஸார் சடலத்தை மீட்டு, மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

விசாரணையில், செம்பனார்கோயில் அருகே மருதூர் பகுதியைச் சேர்ந்த செல்வராஜ் (62) என்பவர் தான் ஆற்றில் மூழ்கி இறந்ததாக கிடைத்த தகவல்களின் அடிப்படையில் போலீஸார், உடல்கூறாய்வுக்கு பின்னர் சடலத்தை செல்வராஜின் குடும்பத்தினரிடம் ஒப்படைத்தனர். அவர்களும் இறுதிச் சடங்குகளை செய்து முடித்தனர்.

இந்த நிலையில் வேலை தேடி ஈரோடு சென்ற செல்வராஜ், அங்கு வேலை கிடைக்காததால் கடந்த வெள்ளிக்கிழமை (ஜன.3) ஊர் திரும்பினார். இதனால் கிராம மக்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

செல்வராஜ் திரும்பி வந்ததால், ஆற்றில் மூழ்கி இறந்தவர் யார் என்று செம்பனார்கோவில் போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

பைக் மீது அரசுப் பேருந்து மோதல்: கணவருடன் பெண் எஸ்.ஐ. உயிரிழப்பு

சிதம்பரம், ஜன.5: கடலூர் மாவட்டம், சிதம்பரம் அருகே ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பைக் மீது அரசுப் பேருந்து மோதியதில் புதுமணத் தம்பதியான பெண் எஸ்.ஐ., அவரது கணவர் உயிரிழந்தனர்.

சிதம்பரம் அருகே உள்ள ஜெயங்கொண்டப்பட்டினத்தை சேர்ந்தவர் கலைவேந்தன் (32). தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். இவரது மனைவி இளவரசி (30). இவர், சிதம்பரம் அருகே உள்ள குமராட்சி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணியாற்றி வந்தார்.

இவர்கள் இருவருக்கும் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. இருவரும் சிதம்பரம் காவலர் குடியிருப்பில் வசித்து வந்தனர்.

சிதம்பரம் அருகே வீரன்கோயில்திட்டு கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சுப நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக கணவர் கலைவேந்தனுடன் பைக்கில் உதவி ஆய்வாளர் இளவரசி சென்றார்.

சித்தலாப்பாடி அருகே இவர்களது பைக் சென்றபோது, கொடியம்பாளையத்தில் இருந்து சிதம்பரம் நோக்கி வந்த அரசு நகரப் பேருந்து திடீரென மோதியது. இதில், பைக் சுமார் 100 மீட்டர் தொலைவுக்கு இழுத்துச் செல்லப்பட்டது. இடிபாடுகளில் சிக்கி பலத்த காயமடைந்த இளவரசி, கலைவேந்தன் ஆகியோர் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தனர்.

கணவர் கலைவேந்தனுடன் காவல் உதவி ஆய்வாளர் இளவரசி.

தகவலறிந்து வந்த அண்ணாமலைநகர் போலீஸார், இருவரின் சடலங்களையும் மீட்டு, உடல் கூறாய்வுக்காக சிதம்பரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், வழக்குப் பதிந்து விசாரித்து வருகிறார்.

தலைமைச் செயலகம், டிஜிபி அலுவலகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்

சென்னை, ஜன. 5: சென்னையிலுள்ள தலைமைச் செயலகம், டிஜிபி அலுவலகத்துக்கு தொலைபேசி மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுத்த மர்ம நபர் குறித்து போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் திங்கள்கிழமை தொடங்குகிறது. இந்த நிலையில், தலைமைச் செயலகம், டிஜிபி அலுவலகத்துக்கு ஞாயிற்றுக்கிழமை தொலைபேசி மூலம் வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளது. இதையடுத்து போலீஸார் வெடிகுண்டு நிபுணர்களுடன் தலைமைச் செயலகம், டிஜிபி அலுவலகத்தின் அனைத்து இடங்களிலும் சோதனை மேற்கொண்டனர். அப்போது, வெடிகுண்டு ஏதும் இல்லாததால், மிரட்டல் வெறும் புரளி என்பது தெரியவந்தது.

இது குறித்து போலீஸார் வழக்குப் பதிவு செய்து வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபர் குறித்து விசாரித்து வருகின்றனர். மேலும், தலைமைச் செயலகம், டிஜிபி அலுவலகம் உள்ளிட்ட இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளன.

சென்னையிலுள்ள கல்வி நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள், விமான நிலையங்கள் ஆகியவற்றுக்கு தொடர்ச்சியாக வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது தலைமைச் செயலகம் மற்றும் டிஜிபி அலுவலகத்துக்கு ஒரே நேரத்தில் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முட்டை விலை ரூ.4.80

நாமக்கல், ஜன. 5: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை மேலும் 25 காசுகள் குறைந்து ரூ.4.80-ஆக நிர்ணயம் செய்யப்பட்டது.

தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் மண்டல ஆலோசனைக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதனையடுத்து, முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை மேலும் 25 காசுகள் குறைக்கப்பட்டு ரூ.4.80-ஆக ஒருங்கிணைப்புக் குழுவால் அறிவிக்கப்பட்டது.

TATA

டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

மதிவு அலுவலகம்: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வணிகப் பூங்கா, கண்பத்ராவ் காடம் மார்க், லோயர் பரேல், மும்பை-400013.
கிளை அலுவலகம்: டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், 1வது தளம், சென்டன்னியல் சதுக்கம், #6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு
(கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) மற்றும் 9(1) ஆகியவற்றின் கீழ்)

அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான 15 நாள்கள் E-ஏல விற்பனை அறிவிப்பு - கடனீட்டுச் சொத்துக்களை மொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) மற்றும் 9(1) ஆகியவற்றின் கீழ்

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கிழ்காணும் கடன்தார்(கள்) / கூட்டுக் கடன்தார் மற்றும் / அல்லது அன்னாரின் சட்டப்பூர்வ வாரிதாரர்கள் / சட்டப்பூர்வப் பிரதிநிதிகள் (கடன்தார்கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், பின்வரும் கடன்தார்(கள்) மற்றும் கூட்டுக் கடன்தார்(கள்) ஆகியோரிடமிருந்து நிலுவைத் தொகைகளைத் திரும்பப் பெறும் பொருட்டு, டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிட்., (TCHFL) நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளதும் TCHFL-இன் அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்" மற்றும் "திருப்பப் பெறப்பட மாட்டாது" எனும் முறையில் 23.01.2025 அன்று விற்பனை செய்யப்பட உள்ளது. இதன் குறைந்தபட்ச விலை மற்றும் பேரணிந்தொகை விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், விற்பனையில் ஏற்த ஒத்தி வைப்பும் / இடைநிறுத்தமும் இல்லாத நிலையில் குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்து / சொத்து E-ஏலத்தின் மூலம் மேற்குறிப்பிட்டபடி 23.01.2025 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு விற்பனை செய்யப்படும். E-ஏலத்தில் கலந்து கொள்வதற்குரிய பேரணிந்தொகைக்கான கேப்பு வரைவோலை (D.D) அடங்கிய மூடி முத்திரையிட்ட உறையை 22.01.2025 அன்று மாலை 5.00 மணிக்குள் TCHFL-இன் அதிகாரப்பூர்வ அலுவலரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வினை முகவரி: டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், 1,ஆவது தளம், சென்டன்னியல் சதுக்கம், # 6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை-600024.

"உள்ளது உள்ள இடத்தில்" எனும் முறையில் பின்வரும் கடனீட்டுச் சொத்தின் / அசையாச் சொத்தின் குறிப்பிடப்பட்டுள்ள சுருக்க விவரங்களுக்கேற்ப விற்பனை செய்யப்பட உள்ளன.

வ. எண்.	கடன் கணக்கு எண்	கடன்தார்(கள்) / கூட்டுக் கடன்தார்(கள்) / சட்ட வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி / ஜாமின்தார்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பு நாள்படி தொகை	குறைந்தபட்ச விலை	டேவணித் தொகை (EMD)	கவாதின வகை	03.12.2024 அன்றுள்ளபடி நிலுவைத் தொகை
1.	10022896 & TCHHF0404 0001000 67743	திரு. வெங்கடேசன் K திருமதி. V லக்ஷ்மி	ஒப்பந்த எண் 10022896-இன்படி நீங்கள் செலுத்தவேண்டிய நிலுவைத்தொகை ரூ.87,26,428/- மற்றும் ஒப்பந்த எண் TCHHF0404000100067743-இன்படி நீங்கள் செலுத்தவேண்டிய நிலுவைத்தொகை ரூ.15,46,253/- & 16.06.2022	ரூ.80,00,000/- (ரூபாய் எண்பது இலட்சம் மட்டும்)	ரூ.8,00,000/- (ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்)	நேரடி சுவாதீனம்	TCHHF0404000100067743 என்ற ஒப்பந்த எண்ணின்கீழ் நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை: ரூ.22,52,168/- மேலும் 10022896 என்ற ஒப்பந்த எண்ணின்கீழ் நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை: ரூ.1,25,85,111/- மொத்தம் ரூ.14837279/-

அசையாச் சொத்தின் விவரம்: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய தனித்தளம். மேல்கட்டுமானத்தின் பரப்பளவு 1180 சதுர அடி மற்றும் கார் நிறுத்துமிடம் மற்றும் பிரிபடாப்பங்கு 865 சதுர அடி உட்பட நிலத்தின் பரப்பளவான 1732.75 சதுர அடியில் அடங்கியது. இத்துடன் வழி சேர்த்து. சர்வே எண் 90, பிளாக் எண் 39, புலூர் கிராமம், மனை எண் 8 பகுதி, மனுய கதவு எண் 16, புதிய கதவு எண் 168, ஞங்காலூரம் பிரதான சாலை, கோடம்பாக்கம், சென்னை-600024. எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: பவாமிக் அபார்ட்மெண்ட்ஸ். தெற்கு: 5. லோகநாதன் அவர்களின் சொத்து. கிழக்கு: கதவு எண் 168/1-இல் உள்ள சட்டப்பூர்வ வாரிசு லடீப் பாய் அவர்களின் சொத்து. மேற்கு: கதவு எண் 167-இல் உள்ள சட்டப்பூர்வ வாரிசு முருகேசா அவர்களின் சொத்து. அளவு: கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் - 49 அடி, கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் - 47 அடி 3 அங்குலம், வடக்குத் தெற்காகக் கிழக்குப் பக்கம் - 22 அடி 6 அங்குலம், வடக்குத் தெற்காக மேற்குப் பக்கம் - 20 அடி 1 அங்குலம். இது கோடம்பாக்கம் சார்பதிவு மாவட்டம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

குறிப்பு: TCHFL (CS/104/2024) க்கு எதிராக மூன்றாம் தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட சிவில் வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த வழக்கில் TCHFL க்கு எதிராக எந்த தடை உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

ஏலதாரர்கள் ஏலப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கு முன் உரிய சோதனைகளை செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏலம் வழக்குகளின் தீர்ப்புகளுக்கு கட்டுப்பட்டதாகும்.

ஏலத்தில் பரவலாக பொது மக்கள் தங்கள் ஏலப்புள்ளிகளை அவரவர்களே நேரடியாகத் தாக்கல் செய்யுமாறு அழைக்கப்படுகிறார்கள் ஆனாலும், இந்த விற்பனை தொடர்பாக கடமையாற்ற வேண்டிய அலுவலர்கள் அல்லது பிற நபர்கள் விற்கப்படும் சொத்தின் மீது நேரடியாகவ